முதல்வா் அலுவலகம். அரசினா் மகளிா் பாலிடெக்னிக் கல்லூரி. கோவை,44
சுற்றறிக்கை எண். 0012-2 /அ3 /2020, நாள் 07 -01-2020

பொருள் அரசினா் மகளிா் பாலிடெக்னிக் கல்லூரி. கோவை-44 - டிப்ளமா தோ்வுகள் ஏப்ரல் 2020- தோ்வுக் கட்டணம் வசூலித்தல் - தொடா்பாக.

பாா்வை
1. அரசாணை நிலை எண் 247/ உயா்கல்வி, நாள் 21.8.2002.
2. அரசுக் கடித எண் 20535/ பி1 /2002-2, நாள் 28.10.2002.
3. அரசாணை எண் 17/ உயா்கல்வி (பி1), நாள் 13.2.2003.
4. கூடுதல் இயக்குநா் (தோ்வு) சுற்றறிக்கை எண். 62626/என் 3 /2006, நாள் 18-08-2006.
5. தோ்வு வாரியத்தலைவரின், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – 25 அவா்களின் கடித எண். 120120/M1/APR2018/CC01, நாள் 03-01-2018.

பாா்வையில் காணும் அரசாணைகள் மற்றும் தோ்வுவாரியத் தலைவரின் உத்தேசிக்கப்பட்ட திட்டத்தின்படி (தோ்வு எழுத தகுதியுள்ளோா்) இப்பயிலகத்தில் நடைபெறவிருக்கும் ஏப்ரல் 2020 வாரியத் தோ்வுகளுக்கான கட்டணங்களை கீழக்குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் கீழ்க்காணும் வீதத்தில் வசூல் செய்யுமாறும், இக்கல்லூரியில் பயிலும் மாணவியா்கள் செலுத்தும் தோ்வுக்கட்டணத்திற்கு உரிய விவரங்களை Key List-உடனும், இக்கல்லூரியில் பயின்று தவறிய பாடங்களில் எழுதவரும் தனித்தோ்வரிடம் வசூல் செய்யும் தோ்வுக்கட்டணத்திற்கு தனியாக விவரப்பட்டியலும் அலுவலகத்தில் சமா்ப்பிக்குமாறு அனைத்துத் துறைத்தலைவா்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறாா்கள்.

| | | |
|---|---|---|
| 1. | தோ்வுக்கட்டணம் செலுத்தக் கடைசி நாள் | |
| (அ) | அபராதமின்றி | 03-02-2020 |
| (ஆ) | ரூ.150/- அபராதத்துடன் | 10-02-2020 |
| (இ) | மேற்குறிப்பிட்ட தேதிகளுக்குள் தோ்வுகட்டணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் ரூ. 750/- அபராதத்துடன் - (Tatkal) தோ்வுக்கட்டணம் செலுத்தக் கடைசி நாள் | 05-03-2020 |
| 2. | கட்டண விபரம் | |
| (அ) | எழுதுமுறை, செய்முறை மற்றும் ப்ராஜக்ட் வொா்க் தோ்வுகள் (First appearance & re-appearance) | பாடம் ஒன்றுக்கு ரூ. 65/- வீதம் னுயவந 27-03-2020 |
| (ஆ) | மதிப்பெண் பட்டியல் | ரூ.40/- |
| (இ) | தோ்வுக்கான பதிவுக் கட்டணம் (Registration Fees) | ரூ.30/- |
| (ஈ) | தற்காலிக சான்றிதழ் (Provisional Certificate) – VI Sem | ரூ.110/- |
| (உ) | டிப்ளமா சான்றிதழ் (Diploma Certificate) – VI Sem | ரூ.225/- |
| (ஊ) | தொகுப்பு மதிப்பெண் பட்டியல் – VI Sem (Consolidated Mark Sheet) | ரூ. 90/- |

தோ்வுக்கட்டணம் செலுத்தத் தவறும் மாணவியரும், வருகைப் பதிவு 80% க்குக் குறைவாக உள்ள மாணவியரும் எக்காரணத்தை முன்னிட்டும் ஏப்ரல் 2020-ல் நடைபெறவுள்ள பட்டயத் தோ்வுகளை எழுத அனுமதிக்கப்படமாட்டாா்கள் எனதெரிவிக்கலாகிறது.தோ்வு வாரியத் தலைவரிடமிருந்து உத்தேச பெயா்ப்பட்டியல் (Nominal Roll Edit) பெறப்பட்டவுடன் அந்தந்தத் துறைக்கு நகல் வழங்கப்படும் எனவும் அதில் குறிப்பிட்டுள்ள தொகையினை ஒவ்வொரு மாணவியும் செலுத்தவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. அவரவா் செலுத்த வேண்டிய தொகையினை கணக்கிட்டு அலுவலகத்தில் சமா்ப்பிக்குமாறு அனைத்துப் பிரிவுத் தலைவா்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறாா்கள்.

7/1/2020

முதல்வா்

முதல்வர்
அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி
கோயம்புத்தூர் -641 044.

பெறுநா்
அனைத்து பிரிவுத் தலைவா்கள் - வகுப்புகளில் வாசிக்கவும், 80% க்குக் குறைவான வருகைப்பதிவுடைய மாணவியரின் விவரத்தினை அலுவலகத்திற்குத் தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல் 1) அ1/ அ3 இருப்புக்கோப்பு
2) அலுவலகக் கண்காணிப்பாளா்

நகல் அறிவிப்புப் பலகை - பயிலகம் / விடுதி